**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**M.C.O.P. No. 5 / 2020**

**2025ம் வருடம் மார்ச் மாதம் 10ம் நாள் திங்கட்கிழமை**

**ம.சா.1 – லிண்டன்அஜீத்**

**முதல் விசாரணை தொடர்ச்சி :–**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. குற்ற இறுதி அறிக்கை உண்மை நகல் ம.சா.ஆ.41

எனது சாட்சியத்தை ஏற்று மனுப்படி உத்திரவாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

விபத்து சமயத்தில் நான் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். நான் தான் ஓட்டிச் சென்றேன். நான் மதுரையிலிருந்து திருப்புவனம் நோக்கி மேற்கிலிருந்து கிழக்காக இருசக்கர வாகனம் ஓட்டிச் சென்றேன். எனக்கு பின்னால் எனது அப்பா டாடா ஏஸ் வாகனத்தில் வந்து கொண்டிருந்தார். சுமார் 1 கி.மீ தூரத்தில் எனது அப்பா வந்து கொண்டிருந்தார். இந்த விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் எனது அப்பா தான் புகார் கொடுத்தார். நான் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணிந்திருந்தேன். எனது அப்பா காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் நான் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணிந்திருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் விபத்து சமயத்தில் இளங்கலை பொறியியல் 4ம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தேன். தற்போது வரை நான் பி.இ பொறியியல் படிப்பை முடிக்கவில்லை. நான் நீதிமன்றத்தில் எனது பட்டப்படிப்பு நிறைவு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன். நான் எனது படிப்பு நிறைவு சான்றின் அசலை ஏன்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஏதாவது தேவை ஏற்படும் என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை. எனக்கு விபத்தில் முதுகு தண்டுவடத்தில் காயம் ஏற்பட்டது. இடதுகை சுண்டுவிரலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. வலது கை கட்டை விரலில் எலும்புமுறிவு ஏற்பட்டது. மற்றும் எனது உடல் முழுவதும் சிராய்ப்பு மற்றும் இரத்தக்காயங்கள் ஏற்பட்டது. வலது கை மணிக்கட்டில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. நான் விபத்தில் காயம் ஏற்பட்டஉடன் மதுரை பிரீத்தி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். அங்கு ஒரு நாள் மட்டும் உள்நோயாளியாக இருந்துவிட்டு கோவை கங்கா மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்து அங்கு 20 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்த பின்பு கங்கா மறுவாழ்வு மையத்தில் 6 மாதங்கள் இருந்தேன். நான் மதுரை பிரீத்தி மருத்துவமனையில் 16.03.2017 அன்று இரவு 8 மணிக்கு சிகிச்சையில் சேர்ந்தேன். மறுநாள் மாலை சுமார் 5 மணியளவில் அங்கிருந்து விடுவிக்கப்பட்டு 17.03.2017 அன்று நள்ளிரவு 12 மணியளவில் கோவை கங்கா மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். மதுரை பிரீத்தி மருத்துவமனையில் 16.03.2017 அன்று நான் சிகிச்சையில் இருந்த போது எனது அப்பா போலீசாரிடம் புகார் கொடுத்தார். எனது அப்பா 17.03.2017 ல் புகார் கொடுத்திருந்தால் அது தவறு. கோவை கங்கா மறுவாழ்வு மையத்திலிருந்து வீட்டிற்கு வந்த பின்பு எனக்கு வர்ம வைத்தியம் அளிக்கப்பட்டது. நான் கோவை கங்கா மறுவாழ்வு மையத்தில் சிகிச்சை எடுத்ததற்கும் வர்ம வைத்தியம் எடுத்துக்கொண்டதற்கும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். அதன்பிறகு எனது வீட்டில் வைத்தே எனக்கு

பயிற்சிமுறை வைத்தியம் அளிக்கப்பட்டது. பயிற்சி முறை வைத்தியத்திற்கு நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு கங்கா மருத்துவமனையில் காயச்சான்று வழங்கப்பட்டது. விபத்து பதிவேடும் கங்கா மருத்துவமனையில் பதிவுசெய்யப்பட்டது. விபத்து நடந்த பின்பு எனது இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு செய்தார் தேதி ஞாபகம் இல்லை. என்மீது மோதிய வாகனம் எந்த தேதியில் மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது என்று எனக்கு தெரியாது. என் மீது மோதிய வாகனம் டாடா இண்டிகா கார் ஆகும். அது என் எதிர்திசையில் இருந்து வந்து என் மீது மோதியது. எனது அப்பா விபத்தை பார்க்காமல் எனக்கு ஆதரவாக போலீசில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. என் மீது மோதிய டாடா இண்டிகா காரின் காப்பீடு 15.03.2017 க்கு முன்பே முடிந்துவிட்டது என்றும் விபத்து நடந்த பின்பு வழக்கிற்காக பாலிசி அமலில் உள்ளதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு 1ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல. கடைசியாக நான் 2 மாதங்களுக்கு முன்பு பயிற்சிமுறை வைத்தியம் எடுத்துக்கொண்டேன். நான் முறையாக தொடர்ந்து பயிற்சிமுறை வைத்தியம் எடுத்திருந்தால் எனக்கு குறைபாடு இருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் கோவை கங்கா மறுவாழ்வு மையத்தில் இருந்த போது அகல்யா சித்த வைத்தியசாலையில் மருத்துவம் பார்த்தேன். நான் கோவையிலிருந்து திரும்பி வந்த போது மதுரை ஹான்னா ஜோசப் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். மதுரை ஏ.வி.என் மருத்துவமனையில் ஒரு மாதம் உள்நோயாளியாக

சிகிச்சை பெற்றேன். நான் பலதரப்பட்ட மருத்துவமனையில் குளறுபடியான பல்வேறு சிகிச்சை பெற்றதால் தான் எனக்கு குறைபாடு உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் கோரியுள்ள இழப்பீட்டுத்தொகை அதிகமானது என்றால் சரியல்ல. நான் மருத்துவ கட்டண பில்களை மிகைப்படுத்தி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(மேற்படி 2ம் எதிர்மனுதார் தரப்பு குறுக்கு விசாரணை 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது)

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை